ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1966/2 - 2016 මැයි මස 09 වැනි සඳුදා - 2016.05.09

*1966/2 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு அறிவித்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 43 ஆம் உறுப்புரையின் (1) ஆம் உப உறுப்புரையின் வண்ணம் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து 2015, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 1933/13 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட அறிவித்தலானது 2016, ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகின்றதென்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 1,
2016, மே 04.

**அட்டவணை**

(1) அவ்வறிவித்தலில் நீதி அமைச்சர் (இல. 27) என்ற தலைப்புத் தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் நிரல் I இல் II ஆவது விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம் ;

"12. குற்றச் செயலொன்றால் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளுக்கு உதவுதல் மற்றும் பாதுகாத்தல் சட்டத்திற்கு (2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) உரிய ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்;

13. நிரல் II இல் காட்டப்படும் நிறுவனங்களுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பான நடவடிக்கைகள் ;

14. நிரல் II இல் காட்டப்படும் நிறுவனங்களை மேற்பார்வை செய்தல் ".

(ஆ) அதன் நிரல் III இல் "(1922 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க) நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டம்" என்பதற்குப் பின்னர் கீழ்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலம் ;

"2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) குற்றச் செயலொன்றால் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளுக்கு உதவுதல் மற்றும் பாதுகாத்தல் சட்டம் ( 2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க)"

5- 700



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.